# சார்பு நீதிமன்றம், சங்ககிரி

## MCOP No.46/2018

ம.சா.4

நாள்.04.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கிருஷ்ணகுமார் | மதம்: | |
| தகப்பனார்/கணவர் பெயர்: | | ஜாதி: | |
| கிராமம்: | | வேலை: | |
| வட்டம்: | | வயது: | |

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 04-ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.4 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் ஈரோடு ஸ்ரீ விஜயா ஹைடெக் மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சை சிறப்பு மருத்துவராக பணிபுரிகிறேன். அழைப்பாணையின் பெயரில் சாட்சி சொல்ல வந்தேன். நான் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள நோயாளி சக்தி என்பவருக்கு மருத்துவமனையில் வழங்கப்பட்ட ரசீதுகளின் நகல்களை கொண்டுவந்துள்ளேன். மேற்படி நோயாளி சக்தி என்பவர் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட ரசீதின்படி தள்ளுபடி போக ரூ.45,500/- கட்டணம் செலுத்தியுள்ளார். நோயாளி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் அதன் பின்னிட்டு இரண்டு தவணையாகவும் மொத்தம் ரூ.33,000/- வைப்பீட்டுத்தொகை செலுத்தியுள்ளார். அதனால் மேற்படி மொத்த கட்டணம் ரூ.45,500/- ல் ரூ.33,000/- போக மீதி ரூ.12,500/- மட்டும் நோயாளி மருத்துவமனைக்கு செலுத்தினார். மேற்படி தொகையை சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்ட தேதியில் செலுத்தினார். அப்போது அவருக்கு வழங்கிய ரசீது நகல் ம.சா.ஆ.10. அதேபோல் நோயாளி மாதேஷ்வரன்

என்பவர் இதே மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காலத்தில் மொத்தம் ரூ.9000/- வைப்பீட்டுத்தொகை செலுத்தியுள்ளார். அவரது மொத்த சிகிச்சைக்கான செலவு தள்ளுபடி போக ரூ.16,800/-. அவர் சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்ட போது வைப்பீட்டுதொகையை வைத்துக்கொண்டு மீதம் ரூ.7800/- மட்டும் செலுத்தினார். அதற்கான ரசீதின் நகல் ம.சா.ஆ.11.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் குறிப்பிட்டுள்ள வைப்பீட்டுத்தொகை நோயாளியிடமிருந்து பெறப்படுவதற்கான காரணம் என்னவென்றால், அது முன்வைப்புத்தொகையாக பெறப்படுகின்றது. மேற்படி முன்வைப்புத்தொகை மருத்துவமனை கட்டணத்திற்கு மட்டும் கழித்துக்கொள்ளப்படும், மருந்துகளுக்கான விலையில் கழித்துக்கொள்ள மாட்டோம்.

ஒப்பம்/-கிருஷ்ணகுமார்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககரி.